பிரிவு 2 முதல் 14 முடிய பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, 1982 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழக, அண்ணாமலைப் பல்கலைக் கழக, பேரறிஞர் அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1982) நிறைவேற்றப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(6) அறிவிப்பு.

தமிழ்ப் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு: 1982 ஆம் ஆண்டு தமிழ் பல்கலைக் கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1982) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

(5) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஈ) தமிழ்ப் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1982 ஆம் ஆண்டு தமிழ் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 9/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."

திரு. அ. ரகுமான்கான்: தலைவரவர்களே, விவாதத்தை நாளை வைத்துக் கொள்ளலாம்; பலரும் பேசவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ் பல்கலைக் கழகம் என்பதால் எல்லோரும் அனேகமாக ஏற்றுக்கொள்வார்கள் என்பதற்காகத்தான் இப்போதே முடித்து விடலாம் என்று எண்ணினேன்.

திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, எல்லோரும் ஏற்றுக் கொண்டாலும் இது குறித்துக் கருத்துக்களைச் சொல்ல வேண்டி இருப்பதால் நாளை எடுத்துக் கொள்ளவேண்டும்.

---

*1982 பிப்ரவரி 11-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.